# பரீட்சகரின் அறிக்கை

## திறமை (திறன்கள்) கப்ஸ்ரோன் பரீட்சை – 2016 யூலை

## (SS2) தகவல் தொழினுட்பவியல் திறன்கள்

தகவல் தொழினுட்பவியல் பற்றிய பரீட்சார்த்திகளின் ஒட்டுமொத்த அறிவைப் பரீட்சிப்பதும் அலுவலகம்சார் மென்பொருள் பற்றி அதிக கவனத்தைச் செலுத்தும் அதே நேரம் அலுவலகச் சூழலில் அதனை பிரயோகிப்பதன் மீதான திறன்களைப் பரீட்சிப்பதுமே இவ்வினாப்பத்திரத்தின் பிரதான நோக்கமாகும். மிகவும் விவேகத்துடன் இவ்வினாப்பத்திரத்திற்கு முகங்கொடுப்பதற்கு செய்முறை அறிவு, அலுவலகச் சூழலில் தகவல் தொழினுட்பவியல் செயலிகளைப் பயன்படுத்தும் அறிவு என்பன இன்றியமையாதவை என்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

## பகுதி A

இருபது (20) கட்டாய வினாக்கள்
(மொத்தம் 40 புள்ளிகள்)

**<u>வினா 01</u>**

இங்கு, புரிந்துகொள்ளக்கூடிய விதத்தில் அடிப்படைத் தகவல் தொழினுட்பவியல் பற்றிய அறிவு பரீட்சிக்கப்பட்டிருந்தது. பெரும்பாலும் சகல பரீட்சார்த்திகளும் விடையளிக்க முனையும் இவ்வினா வுக்கான செயலாற்றுகை திருப்திகரமாகக் காணப்பட்டது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் அண்மைய தொழினுட்பவியல்களை அடிப்படையாகக் கொண்டிருந்த வினாக்களுக்குச் சரியாக விடையளித் திருந்தனர். ஒட்டுமொத்தத்தில் உயர் புள்ளிகளைப் பெறுவதற்கு இவ்வினாவுக்கு உயர்ந்தளவான புள்ளிகளைப் பெற்றுக்கொள்வது மிகவும் அவசியமானதாக இருப்பதுடன், அதனைப் பெறுவதற்கு பாடத்திட்டம் தொடர்பில் பூரணமான அறிவைக் கொண்டிருப்பது இன்றியமையாததாகும்.

பகுதி A இன் ஏனைய உப வினாக்களுடன் ஒப்பிடுகையில் வினா இலக்கங்கள் 1.9 மற்றும் 1.10 ஆகிய வினாக்களுக்கு பல பரீட்சார்த்திகள் பிழையான விடைகளைத் தெரிவுசெய்திருந்ததை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

பல பரீட்சார்த்திகள் வினா இல. 1.9 இல் தகவல் தொழினுட்ப முறைமைகளின் நெறிமுறைசார்ந்த ஏற்றுக்கொள்ளத்தக்க பாவனையாகக் கருதப்படக்கூடிய நடவடிக்கை எதுவெனக் கேட்கப்பட்டதற்குச் சரியான விடையாக அமைகின்ற, விடை இல. (3) இல் வழங்கப்பட்ட "உமது அலுவலக மேசைக் கணினியில் மைக்ரோசொப்ற் ஓபிஸ் 2013 மென்பொருளை நிகழ்நிலைப்படுத்தல்" என்ற விடையைத் தெரிவுசெய்யத் தவறியிருந்தனர்.

வினா இல. 1.10 இற்கான விடையாக அமையும் 2007 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்கக் கணினிவழிக் குற்றங்கள் சட்டம் பற்றி பெரும்பாலான பரீட்சார்த்திகளிடம் விழிப்புணர்வு காணப்படவில்லை. தகவல் தொழினுட்பவியலின் நெறிமுறைசார்ந்த மற்றும் சட்டப் பின்புலங்கள் தொடர்பில் கவனத்தைச் செலுத்துவது முக்கியமானதாகும்.

1.1 தொடக்கம் 1.10 வரையான வினாக்களுக்காகத் தெரிவுசெய்யும் விடைகளின் இலக்கங்களை எழுதுவதற்குப் பதிலாக சில பரீட்சார்த்திகள் முழுமையான விடையினை எழுதியிருந்தனர். இது

எவ்வித பெறுமதியுமற்ற நேர விரயமாகும். மேலும், 1.16 தொடக்கம் 1.20 வரையான வினாக்களுக்கு "சரி" அல்லது "தவறு" என எழுதுமாறு அறிவுறுத்தியிருந்தும் சில பரீட்சார்த்திகள் அதனை எழுதாது அதற்குப் பதிலாக "√" அல்லது "x" எனும் குறிகளை இட்டிருந்தனர்.

பகுதி A இலுள்ள "நோக்கச் சோதனை வினாக்களுக்கு" விடையளிக்கும்போது வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களை வாசித்து விளங்கிக்கொள்வது மிகவும் முக்கியமானதாகும்.

## பகுதி B

ஏதாவது நான்கு (04) வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்கப்படல் வேண்டும்.
(மொத்தம் 60 புள்ளிகள்)

### வினா 02

இங்கு தரவுத்தளம் தொடர்பான அறிவு பரீட்சிக்கப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளிக்க முனைந்திருந்ததுடன் அவர்கள் பகுதி (a) மற்றும் பகுதி (b) ஆகிய வற்றுக்கு நன்றாக விடையளித்துப் புள்ளிகளைப் பெற்றிருந்தனர். பலர் நல்ல விளக்கத்தைக் கொண்டிருந்ததுடன் பிரதான விடயங்களை முன்வைத்து 10 புள்ளிகளை இலகுவாகப் பெற்றிருந்தனர். ஆயினும் பகுதிகள் (c) மற்றும் (d) இற்கான விடைகள் திருப்திகரமானதாக அமையவில்லை. பகுதி (b) இல் மிகவும் பொருத்தமான தரவு வகைகளை அடையாளங்காணப் பணிக்கப்பட்டிருந்தது. இங்கு சில பரீட்சார்த்திகள் "(உரை)text" இற்குப் பதிலாக "பெயர் (name)" எனவும் "(நாணயம்) currency" இற்குப் பதிலாக "ரூபா(Rs.)" அல்லது "விலை(Price)" எனவும் பிழையான விடைகளை வழங்கியிருந்தனர். பகுதி (d) இனை பல பரீட்சார்த்திகள் பிழையாக விளங்கியிருந்தனர். தரப்பட்ட விவரணத்திற்கான ஒரு அறிக்கையைத் தயாரிப்பதுடன் தொடர்புபட்ட நடைமுறையை விபரிக்குமாறு கேட்டதற்கு, அவர்கள் தரவுத் தளம் ஒன்றை எவ்வாறு உருவாக்குவது மற்றும் தரவுகளை உள்ளிடுவது என்பது பற்றி எழுதியிருந்தனர்.

இவ்வினாவுக்கான ஒட்டுமொத்த செயலாற்றகை திருப்தியானதாக இருந்தது. பரீட்சார்த்திகள் இவ்வகை வினாக்களுக்கு உயர் புள்ளிகளைப் பெறுவதற்கு தரவுத்தளம் தொடர்பான கோட்பாடுகள் மற்றும் செய்முறைப் பயன்பாடுகள் தொடர்பில் விளக்கத்தினைக் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

### வினா 03

இவ்வினாவில் பவர் பொயின்ட் மென்பொருளைப் பயன்படுத்தி அளிக்கை ஒன்றை உருவாக்குவது தொடர்பான அறிவு பரீட்சிக்கப்பட்டது. குறைந்தளவான பரீட்சார்த்திகளே இவ்வினாவைத் தெரிவு செய்து விடையளித்திருந்தனர். அவர்களில் பலர் சரியான விடைகளை வழங்கியிருந்தனர். ஆயினும் அவர்களுடைய விவரிப்புகளில் சரியான தொடர்பு அம்சங்களையும் பிரதான சொற்பதங்களையும் வழங்குவதற்குத் தவறியிருந்தனர்.

இவ்வகையான வினாவுக்கு விடையளிப்பதற்கு தகவல் தொழினுப்பவியல் செயலிகள் பற்றி வெறுமனே பார்ப்பதோ அல்லது மேலோட்டமாகப் படிப்பதோ போதுமானளவு அறிவினை வழங்கமாட்டாது ; பரீட்சார்த்திகள் அனுபவங்களைக் கொண்டிருப்பதும் அவசியமானதாகும்.

### வினா 04

விரிதாள் செயலி ஒன்றில் சூத்திரங்களை / தொழிற்பாடுகளைப் பிரயோகிப்பதற்கான ஆற்றல் இங்கு பரீட்சிக்கப்பட்டது. சில பரீட்சார்த்திகள் மாத்திரமே இவ்வினாவைத் தெரிவுசெய்து விடையளிக்க முனைந்திருந்தனர். இங்கு நேரடியான விடைகளே எதிர்பார்க்கப்பட்டிருந்தும் அவர்களில் பலர் அவற்றுக்குச் சரியாக விடையளிக்கத் தவறியிருந்தனர். இவ்வகை வினாக்களை அதிக

மனவுறுதியுடன் முகங்கொடுப்பதற்கு விரிதாள்கள் தொடர்பான அதிக பய்றிசிகளைப் பெற்றுக்கொள்ளுதல் அவசியமானதாகும்.

பெரும்பாலான பரீட்சார்த்திகள் சார்புத் தொடர்புகள் மற்றும் சார்பற்ற தொடர்புகள் ஆகியவற்றுக் கிடையிலான வேறுபாட்டைப் புறக்கணித்திருந்தனர்.

இவ்வினாவுக்கு குறைந்தளவு மாணவர்கள் மாத்திரமே உயர் புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

**<u>வினா 05</u>**

வங்கி நடவடிக்கைகளின்போது இணையத்தையும் அதன் செயலிகளையும் பயன்படுத்துவதற்கான அறிவு இங்கு பரீட்சிக்கப்பட்டிருந்தது. பல பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு முன்னுரிமை அளித்திருந்தனர்.

இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமாக இருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் பகுதி (b) இற்கும் பகுதி (c) இற்கும் சரியான விடைகளை அளித்திருந்தனர். ஆனால் பெரும் எண்ணிக் கையிலான பரீட்சார்த்திகள் பகுதி (a) இனைப் பிழையாக விளங்கியிருந்தனர். இந்த வினா இணையச் சேவை வழங்குநர் ஒருவருடன் வதிவிடத்திலுள்ள கணினி ஒன்றை இணைப்பதற்குப் பயன்படுத்தப்படும் இணைப்புத் தொழினுட்பங்களைப் பட்டியலிடுவதை எதிர்பார்த்தது. அவர்களில் பலர் இணைப்புத் தொழினுட்பங்களுக்குப் பதிலாக இணைப்புச் சாதனங்கள் பற்றிக் குறிப்பிட்டிருந்தனர். பகுதி (c) இல் சில பரீட்சார்த்திகள் இணைய வங்கிச் சேவை முறைமையை கடன் அட்டைப் பாவனையுடன் சேர்த்து குழப்பியடித்திருந்தனர்.

பரீட்சார்த்திகள் விடையளிப்பதற்கு முன் வினாவைக் கவனமாக வாசித்து விளங்கிக்கொள்ளுதல் வேண்டும். நவீன வியாபாரச் சூழலில் மிகவும் சாதாரணமாகக் காணப்படுகின்ற இணைய வங்கிச் சேவைகள் போன்றவற்றைக் குறைந்தபட்சம் வாசிப்பதன் மூலமாவது பரீட்சார்த்திகள் நவீன தொழினுட்ப முன்னேற்றங்கள் பற்றி அறிந்துகொள்ளுதல் வேண்டும்.

**<u>வினா 06</u>**

இணையத்தினூடான கோவைப் பரிமாற்றம் மற்றும் அடிப்படை மின்னஞ்சல் பயன்பாடு போன்றவை தொடர்பான அறிவு இங்கு பரீட்சிக்கப்பட்டது. தெரிவு வினாக்களில் அதிகமாக முன்னுரிமை அளிக்கப்பட்ட வினா இதுவாகும். சிறு தொகை மாணவர்கள் பகுதி (d) (ii) இனைப் பிழையாக விளங்கிக்கொண்டிருந்தபோதிலும் பரீட்சார்த்திகளுக்கு வழங்கப்பட்ட பாராட்டத்தக்க தரத்திலிருந்த வினாவாகவும் அவர்களால் நன்றாக விடையளிக்கப்பட்ட வினாவாகவும் இது காணப்பட்டது. அந்தப் பரீட்சார்த்திகள் தரவினது வகைகளையும் தரவு வகைகளையும் குழப்பியடித்திருந்தனர்.

பெரும்பாலான பரீட்சார்த்திகளால் உயர்ந்தளவு புள்ளிகளைப் பெறக்கூடியதாக இருந்ததுடன் செயலாற்றுகையும் உயர்ந்த மட்டத்தில் காணப்பட்டது.

**<u>வினா 07</u>**

மைக்ரோசொப்ற் வேட் இலிருந்து தெரிவுசெய்யப்பட்ட அம்சங்களின் தொழிற்பாடுகளை விபரித்து சுருக்கக் குறிப்புகள் எழுதும் நோக்கில் சொல் நிரற்படுத்தல் மென்பொருள் (word processing software) பற்றிய அறிவைப் பரீட்சிப்பதற்காக இவ்வினா தயாரிக்கப்பட்டிருந்தது. மிதப்படுத்தப்பட்ட எண்ணிக்கையிலான மாணவர்கள் இவ்வினாவைத் தெரிவுசெய்திருந்தனர். அவர்களில் பெரும்பாலும் ஒவ்வொருவரும் பகுதி (a) மற்றும் பகுதி (b) ஆகியவற்றிற்குச் சரியாக விடையளித்திருந்தனர். ஆயினும் பகுதிகள் (c), (d), (e) ஆகியவற்றுக்கு மிகச் சிலரே சரியான விடை அளித்திருந்தனர்.

சில மாணவர்கள் சம்பந்தமற்ற நீண்ட விடைகளை வழங்கியிருந்தனர். அவர்கள் பொது அறிவைக் கொண்டு விடையளிக்க முனைந்திருந்தனர். விளங்கிக்கொள்வதில் காணப்பட்ட குறைபாடு

செய்முறைப் பயன்பாட்டிற்கான வெளிப்பாட்டில் குறைபாட்டை ஏற்படுத்தியது. பரீட்சார்த்திகள் அதிகளவான புள்ளிகளைப் பெறுவதற்கு அடிப்படையான சொல் நிரப்படுத்தல் அம்சங்களில் பயிற்சி பெறுவதற்கு அதிக நேரத்தினைச் செலவிடுதல் வேண்டும்.

இவ்வினாவுக்கு சொற்பளவிலான பரீட்சார்த்திகளால் மட்டுமே உயர்ந்தளவு புள்ளிகளைப் பெற முடிந்திருந்தது.

**<u>பொது அபிப்பிராயங்கள்</u>**

- சிறு தொகையான பரீட்சார்த்திகள் விடைகளுக்கு இலக்கமிடுவதற்குப் பதிலாக விடைப் புத்தகத்திற்கு இலக்கமிட்டிருந்தனர். அவர்கள் வினா இலக்கத்தை இடுவதற்காக விடப்பட்டிருந்த இடத்தில் பக்க இலக்கத்தை இட்டிருந்தனர்.
- இவ்வினாப்பத்திரம் தகவல் தொழினுட்பவியலின் செய்முறை விடயங்களைப் பரீட்சிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டிருந்ததுடன் இதில் அதிகளவான செய்முறை வினாக்கள் உள்ளடங்கியிருந்தன. பரீட்சார்த்திகள் இவ்வினாப்பத்திரத்திற்கு அதிகளவு புள்ளிகளைப் பெறுவதற்கு கணக்கீடு மற்றும் வியாபாரச் சூழல்களில் காணப்படுகின்ற தகவல் தொழினுட்பம் மற்றும் அதன் செயலிகளின் செய்முறை விடயங்களுடன் மிக நெருக்கமாக இருத்தல் வேண்டும். அத்துடன் இவ்வகை வினாக்களுக்கு உயர் புள்ளிகளை எடுப்பதற்கு தகவல் தொழினுட்பவியலுடன் தொடர்புடைய அனுபவங்கள் பெற்றுக்கொள்ளுதல் இன்றியமையாததாகும்.

- - -

**பரீட்சார்த்திகளின் ஆற்றல் மட்டத்தினை விருத்திசெய்வதற்கு கவனத்திற்கொள்ளவேண்டிய பொதுவான விடயங்கள்**

1. முழுப் பாடத்திட்டத்தையும் ஆழமாகப் படிக்கவும்.
2. வினாவை பல தடவைகள் வாசித்து வினாவில் கேட்கப்பட்டதற்கு மாத்திரம் விடையளிக்கவும். வினாவில் நேரடியான மற்றும் துல்லியமானதொரு விடை எதிர்பார்க்கப்படும் சந்தர்ப்பத்தில் தேவையற்ற விபரிப்புகளையும் விபரங்களையும் எழுத வேண்டாம்.
3. தகவல் தொழினுட்பவியலுடன் தொடர்புடைய பாடப்புத்தகங்கள், நூல்கள் கட்டுரைகள், சஞ்சிகைகள் மற்றும் ஏனையவற்றை வாசிக்கவும்.
4. விடைகளை எழுதும்போது தேவையாயின் உதாரணங்களை வழங்கி, ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் தகவல் தொழினுட்பவியலுடன் தொடர்புடைய கோட்பாட்டு ரீதியானதும் செய்முறை ரீதியானதுமான அறிவை சமர்ப்பிப்பது முக்கியமானதாகும்.
5. கையெழுத்து விளங்கக்கூடியதாக இருப்பதையும் விடைகளுக்கு இலக்கமிடப்பட்டிருப்பதையும் உரிய முறையில் உறுதிப்படுத்திக்கொள்ளவும்.
6. வினாப்பத்திரத்தில் தரப்பட்ட அறிவுறுத்தல்களைப் பின்பற்றவும்.
7. கடந்தகால வினாப்பத்திரங்கள், திசைமுகப்படுத்தற் பத்திரங்கள் ஆகியவற்றைச் செய்துபார்த்து உமது அறிவை மேம்படுத்திக்கொள்ளவும்.
8. வினைத்திறனான நேர முகாமை
9. விடைத்தாளை ஒப்படைப்பதற்கு முன்னர், விடை இலக்கங்கள் சரியாக எழுதப்பட்டுள்ளதா என்பதை இருமுறை பரீட்சிக்கவும்.
10. நல்ல தயார்படுத்தலுடனும் சித்தியடைதல் என்னும் நோக்கத்துடன் பரீட்சையினை எழுதவும்.

- * * * -